(b) The matter is under the consideration of the Government in consultation with the Board of Revenue (Commercial Taxes).

Mr. Speaker, Sir, I wish to add that this may have to be reviewed in the light of the National Emergency.

மதுவிலக்குக் குற்றங்கள்

*430 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் எத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன?

(இ) அவைகளில் தண்டனையடைந்த குற்றவாளிகள் எத்தனை பேர்?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1,37,714.

(இ) 1,27,166.

உபகாரச் சம்பளம் வழங்குதல்

*431 **கேள்வி.—திரு. எஸ். மணி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் திருச்சி மாவட்டம், மிளகுப்பாறை நலப்பள்ளி விடுதியின் தலைமையாசிரியர் மீது மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கிய விஷயமாக புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, அந்தத் தலைமை ஆசிரியர் மாணவர்களுக்குறிய உதவித் தொகையை ஆள் மாறாட்டம் செய்து வாங்கினதாகக் கூறப்படுகிறது. அப்படியானால், அவர் பேரில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுத்திருக்கிறது?

கனம் சபாநாயகர் : "கூறப்படுகிறது" என்றால், அதை வைத்துக் கேள்வியாகக் கேட்க முடியாது. குறிப்பாக ஏதாவது 'கம்ப்ளெயின்ட்' இருந்தால், கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கலாம். எங்கோ கேள்விப்பட்ட வதந்தியை வைத்துக் கொண்டு இங்கே கேள்வி கேட்பது கூடாது.

திரு. எஸ். மணி : கம்ப்ளெயின்டின் நகல் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டது. அம்மாதிரி கம்ப்ளெயின்ட் வந்ததா என்று தான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.